முருகப்பெருமான் துணை

**மகான் சண்டிகேசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.02.2024**, சனிக்கிழமை

1. உலகமெல்லாம் ஞானவான்களை
உருவாக்கி மாற்றம் நிகழ்த்த
வேலவன் அம்சமாக வந்த
வினைபோக்கும் ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சோபகிருது கலைதிங்கள்
ஆசிபட இருபான் திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 20 ம் நாள், 03.02.2024, சனிக்கிழமை)
3. ஆசிதனை சண்டிகேசர் யானும்
அறிவிப்பேன் உலகநலம் பெற
ஆசிதந்து ஞானதீட்சை தந்து
அரங்கன் உருவாக்கும் மக்களே
4. மக்களே உலகமாற்றம் செய்யும்
மாண்புள ஞானப் படைகளாக
ஆக்கமிக்க தொண்டுள்ளமுடன்
அன்னதான சேவை ஆற்றும்
5. ஆற்றும் தருமவான்களாக
அளவிலா தருமசாலைகள் நிறுவி
மாற்றம் தரும் உபதேசமான
மகான் அரங்கன் சைவ நெறியை
6. நெறிமுறையை உலகோர் எல்லாம்
நிலவுலகில் கடைபிடிக்கும் படி
தெரிவிப்பேன் சேவை ஆற்றியே
தொண்டர் படைகள் அனைத்தும்
7. அனைத்தும் அரங்கன் முன்மொழிய
ஆறுமுகனார் ஆசிக்குத் தேறி
இணையிலா அனுகூலம் பெற்று
எல்லோரும் ஞானிகளாவர்

8. ஆவரே ஞானசபையாகவே
அடையாளம் தருகின்ற வண்ணம்
அவனியில் அற்புதம் நடந்திட
ஆன்மீக அரசியல் களம் தனை

9. களம்தனை நிறுவி இனிதே
கலியினில் ஞானபலம் கூட்டி
வலம் வந்து அஞ்ஞானவான்கள்
வஞ்சம் சூழ்ச்சி கயமை வென்று

10. வென்றுமே ஞானத்தலைமை
விரைந்து உருவாக்கும் வண்ணம்
நன்றான சபைகள் கூட்டி
ஞானிகளெல்லாம் ஒன்று சேர

11. ஒன்றுசேர உலகமாற்றம்
ஓங்காரக் குடிலில் இருந்துமே
நன்றுதரும் ஞான ஆட்சி துவங்கி
நாடெங்கிலும் ஞானிகள் ஆட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—